

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையிலும், விராலிமலை மத்திய ஒன்றிய செயலாளர் கே.பி.அய்யப்பன் வரவேற்புரையிலும் விராலிமலையில் நடைபெற்ற இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர்.உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் பொதுக்கூட்டத்தில் கழக மாணவர் அணி தலைவர் ராஜீவ் காந்தி சிறப்புரையாற்றினார். நிகழ்வில் தலைமை கழக பேச்சாளர்கள் தமிழினியன், கபில் சாய், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் மு.பி.மணி, விராலிமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் மு.பி.ம.சத்தியசீலன், பாலமுருகன், மா.செந்தில்நாதன், மெடிக்கல் குமார், சசி (எ) சுகுமாறன், பழனிச்சாமி, பவுன்ராஜ், கபிரியேல், கந்தலூர் ரெங்கராஜ். பாலசுப்பிரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் பேருந்துநிலையத்தில் 20.12.2024 அன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(கோவை) லிட் சார்பில் 27 புதிய தாழ்தள சொகுசுப் பேருந்துகள் இயக்கத்தையும், மகளிர் விடியல் பயணத் திட்டம் விரிவாக்கம் பணியினையும் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கிவைத்து பணிக்காலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 32 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார், பாடி மாநகராட்சி மேயர் திருமதி.கா.ரங்க நாயகி ராமசந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன், மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், சூலூர் பேரூராட்சி தலைவர் திருமதி.தேவி மன்னவன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட் மேலாண் இயக்குநர் ஜி.செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.தினகரன், பொது மேலாளர் கே.செல்வக்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், உதவி மேலாளர்கள்/ கிளைமேலாளர்கள், பணியாளர்கள் மற்றும் அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகள் உட்பட பலர் உள்ளனர்.

### அரசு போக்குவரத்துத் துறை கழகம் (கோவை) லிட் சார்பில்

# 27 புதிய தாழ்தள சொகுசுப் பேருந்துகள் இயக்கம்!

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

கோவை, டிச. 22 -

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் பேருந்துநிலையத்தில் நேற்று முன்தினம் (20.12.2024) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(கோவை) லிட் சார்பில் 27 புதிய தாழ்தள சொகுசுப் பேருந்துகள் இயக்கத்தையும், மகளிர் விடியல் பயணத் திட்டம் விரிவாக்கம் பணியினையும் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி முன்னிலையில், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கிவைத்து பணிக் காலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 32 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி மாநகராட்சி மேயர் திருமதி.கா.ரங்கநாயகி ராமசந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றி செல்வன், சூலூர் பேரூராட்சி தலைவர் திருமதி. தேவி மன்னவன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(கோவை) லிட் மேலாண் இயக்குநர் ஜி.செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.தினகரன், பொது மேலாளர் கே.செல்வ க்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், உதவி மேலாளர்கள்/ கிளை மேலாளர்கள், பணியாளர்கள் மற்றும் அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 8500 பேருந்துகள் வாங்குவதற்கு ஆணையிடப்பட்டு, தற்போது வரை 3000 பேருந்து மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கிப்பட்டுள்ளன. அதன் ஒருபகுதியாகத் தான் இன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் 27 தாழ்தள சொகுசு பேருந்துகள் நகர வழித்தடத்தில் இயக்குவதற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முத்தான திட்டங்களில் ஒன்றான மகளிர் விடியல் பயண திட்டம் எந்தளவிற்கு சிறப்பாக செயல்படுகிறது என்பதை தினந்தோறும் கவனித்து வருகின்றார்கள்.

இத்துறை சிறப்பாக செயல்படுவதற்கான வழி காட்டுதலையும் வழங்கி கொண்டுயிருக்கிறார்கள். இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு ஒவ்வொரு ஆண்டும் கூடுதலான நிதியினை ஒதுக்கீடு செய்துவருகிறார்கள். இந்த திட்டத்தை செயல்படுத்தும்போதும் பேருந்துகளில் பயணம் செய்யும் மகளிரின் விகிதம் 40 சதவீதமாக இருந்தது, தற்போது 69 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது. மகளிர் வாழ்க்கையில் இத்திட்டம் மிகவும் உறுதுணையாக இருக்கின்றது. பெண்களின் வாழ்வில் மிகப்பெரிய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 595 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த திட்டத்தின் சிறப்பை உணர்ந்து, இத்திட்டத்தை கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பிற மாநிலங்களில் செயல்படுத்தி வருகின்றார்கள்.

தமிழ்நாடு அரசால் 08.05.2021 முதல் விடியல் பயணத்திட்டம் துவக்கி வைக்கப்பட்டு கோயம்புத்தூர் கோட்டத்தில் 991 நகர பேருந்துகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நாளொன்றிற்கு சுமார் 7.84 இலட்சம் மகளிர்கள் தினசரி கட்டணமில்லா பயணம் மேற்கொண்டு உள்ளனர். 08.05.2021 முதல் நவம்பர் 2024 வரை 8599.98 லட்சம் மகளிர்கள் கட்டணமில்லா பயணம் மேற்கொண்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து 24.02.2024 முதல் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு உதகை, வால்பாறை, தாளவாடி மற்றும் ஆணைக் கட்டி மலைப்பகுதியில் 35 கிலோமீட்டருக்கு கீழ் இயக்கப்படும் 122 புறநகர் பேருந்துகளில் மகளிர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கட்டணமில்லா பயணம் செய்ய நாளொன்றிற்கு மலைப்பகுதி புறநகர் பேருந்துகளில் சுமார் 43,000 மகளிர்கள் தினசரி கட்டணமில்லா பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.24.02.2024 முதல் நவம்பர் 2024 வரை மலைப்பகுதி புறநகர் பேருந்துகளில் 120.08 இலட்சம் மகளிர்கள் கட்டணமில்லா பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கோயம்புத்தூர் மண்டலத்தில் காந்திபுரம் - காந்திபுரம்(III/IIIA) வழித்தடத்தில் 4 பேருந்துகளும், காந்திபுரம்சோமனூர் (90A) வழித்தடத்தில் 2 பேருந்துகளும், மருதமலை - காந்திபுரம் (70) வழித்தடத்தில் 3 பேருந்துகளும், சோமனூர் - உக்கடம்(20A) வழித்தடத்தில் 2 பேருந்துகளும், சித்ரா - பேரூர்(2) வழித்தடத்தில் 2 பேருந்துகளும், காந்திபுரம் - காரணம் பேட்டை(19B/19C) வழித்தடத்தில் 2 பேருந்துகளும், என மொத்தம் 15 நகர பேருந்துகளில் மகளிர் விடியல் பயணம் திட்டம் இன்று முதல் விரிவுபடுத்தப்படுகிறது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கோவை கோட்டத்தில் பணி காலத்தில் இறந்த 32 பணியாளர்களின் வாரிசுதாரர்களில் 3 பேருக்கு ஓட்டுநர் பணியும், 25 பேருக்கு நடத்துனர் பணியும், 3 பேருக்கு மகளிர் நடத்துனர் பணியும், ஒருவருக்கு தொழில்நுட்ப பணியாளர் பணியும், என மொத்தம் 32 பேருக்கு பணிநியமன ஆணைகள் இன்று வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் போக்குவரத்து துறையில் பணி ஓய்வு பெற்றவர்கள், பணிக்காலத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு வழங்க வேண்டிய பணப்பலன்கள் ரூ.380 கோடியினை வழங்கினார்கள். நிலுவையில் உள்ள தொகையினை வழங்குவதற்குகான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும். இதற்கான பணிகளை விரைந்து முடிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். இந்த துறை சிறப்பாக செயல்படுவதற்கான அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார்கள். என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

### அ.தி.மு.க. - பா.ஜ.க. உடன் கூட்டணி இல்லை என்று கூறிவிட்டு

# கொல்லைப்புறம் வழியாக பா.ஜ.க.வைக் கெஞ்சுகிறது அ.தி.மு.க.!

## புதுக்கோட்டையில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, டிச. 22 -

புதுக்கோட்டை வடக்கு ராஜ வீதியில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் மறைந்த திமுக முன்னாள் பொதுச் செயலாளர் பேராசிரியர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை. முத்து ராஜா, மாநகர செயலாளர் ஆ.செந்தில் உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர்எஸ்.ரகுபதிகூறுகையில்:

1952ல் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வேண்டும் என்று அம்பேத்கர் ஒரு சட்டத்தை கொண்டு வர வேண்டும் என்று கூறினார் ஆனால் அப்போது அதற்கு ஆதரவு இல்லை. ஆனால் அதற்கு அம்பேத்கர் இதற்குப் பிறகு அந்த சட்டம் நிச்சயம் நிறைவேறும் என்று கூறியிருந்தார். 1989இல் கலைஞர் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை என்ற சட்டத்தை நிறைவேற்றினார். அதற்குப் பிறகு 98, 99 இரண்டு முறையும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது அவர்கள் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை உள்ளது என்ற அம்பேத்கர் கூறிய சட்டத்தை அவர்கள் நிறைவேற்ற வில்லை. 2004-2009ல் காங்கிரஸ் கட்சியில் மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது தான் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது. எனவே அம்பேத்கரின் லட்சியங்களை நிறைவேற்றுகிற அரசு காங்கிரஸ் அரசாங்கத்தால் ஒன்றியத்தில் இருந்ததே தவிர பாஜக அரசு இல்லை. மதசார்பு என்கின்ற வார்த்தையை அம்பேத்கர் சேர்க்க வேண்டும் என்று சொன்னவுடன் அதை சேர்த்தது காங்கிரஸ் கட்சி தான். அன்று பாஜக வெற்றி பெற்றிருந்தால் அரசியல் அமைப்பு சட்டத்தில் மதசார்பு என்கின்ற வார்த்தையே சேர்க்க விட்டிருக்க மாட்டார்கள். இன்றைக்கு கூட அவர்களது நோக்கம் மதச்சார்பு என்கின்ற வார்த்தையை இருக்க வேண்டும் என்பதுதான்.

காங்கிரஸ் கட்சி அம்பேத்கரை அவமதித்தது என்று சொல்வதெல்லாம் ஏற்புடையதல்ல. அவர்கள் தான் அவருக்கு உரிய மரியாதை கொடுத்தார்கள். தொடர்ந்து அம்பேத்கரை முன்னிலைப்படுத்திய இயக்கங்கள் திராவிட இயக்கங்கள். அது இந்தியா முழுவதும் எடுத்து செல்லப்பட்டது.

மனிதன் நிதானம் இழந்து விட்டால் எதை வேண்டுமென்றாலும் பேச முடியும். அதேபோல் அமித்ஷா ஆத்திரத்தில் பேசிய பேச்சுக்கள் என்பது அவர் பேசியதன் வெளிப்பாட்டிலேயே தெரியும். ஒரு வரியை மட்டும் தான் எடுத்துக் கொண்டனர் மற்ற வரிகளை பார்க்கவில்லை என்று அமித்ஷா கூறுகிறார். அந்த ஒரு வரியே எல்லாவற்றிற்கும் பொருத்தமானதாக அமைந்திருக்கிறது.

முதலில் சொல்லிவிட்டு பின்னர் மாற்றி திசை திருப்புவது பா.ஜ.க.வுக்கு கை வந்த கலை, எந்த ஒரு பிரச்சினை யையும் பா.ஜ.க. உடனே திசை திருப்ப பார்ப்பார்கள். அதே போல் தான் அம்பேத்கர் குறித்து அமித்ஷா பேசியதையும் திசை திருப்பப் பார்க்கிறார்கள். ஆனால் அம்பேத்கரை அவர்கள் அவமரியாதை படுத்தினார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எதற்காக இந்த விவ காரத்தை அவர் எடுக்க வேண்டும். அவரின் நோக்கமே அதற்குத்தான் இந்தியா முழுவதும் கண்டித்துக் கொண்டிருக்கிறோம்.

1952ல் பாராளுமன்ற தேர்தல் சட்டமன்றத் தேர்தல் என்று ஒரே நேரத்தில் தேர்தல் கொண்டுவரப்பட்டது. ஆனால் அந்த ஒரே நாடு ஒரே தேர்தல் கொள்கையை தொடர்ந்து அமல்படுத்த முடிந்ததா? முடியவில்லை, ஏனென்றால் திடீரென்று ஒன்றிய அரசு கலைக்கப்படுகிறது மாநில அரசு கலைக்கப்படுகிறது. மேலும் குறுகிய கால ஆட்சி காலத்தை கொடுக்க முடியாது. அரசியல் அமைப்புச் சட்டப்படி ஐந்தாண்டு காலம் ஆட்சி இருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஒரு பொது தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஐந்தாண்டு காலம் ஆட்சிப் பொறுப்பில் இருக்க வேண்டும். இடையில் அவர்களது ஆட்சி கவிழ்ந்தால் பொறுப்பாக முடியாது. ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தும் பொழுதே அது தோல்வியை கண்டுள்ள கொள்கையாக உள்ளது. ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது இந்தியாவுக்கு சாத்தியப்படாது. உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. இந்தியாவிற்கு ஒரே நாடு ஒரே தேர்தல் கொள்கை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்காது.

அ.தி.மு.க.-பா.ஜ.க. உடன் கூட்டணி இல்லை என்று கூறிவிட்டு கொல்லைப்புறம் வழியாக பாஜகவை கெஞ்சுவதாக தான் அதிமுக பொதுக்குழுவில் நிறைவேற்றிய தீர்மானத்தை வைத்து பார்க்கின்றோம். கொடநாடு வழக்கை பொறுத்தவரை சாட்சியங்கள் அடிப்படையில் தான் விசாரணை நடைபெற்று வருகிறது. கொடநாடு குற்றவாளிகளை கொண்டு வந்து நிறுத்த வேண்டும் என்பது தான் எங்களது லட்சியம் அதனால் அந்த வழக்கில் தாமதப்படுத்த வேண்டிய எண்ணம் இந்த அரசுக்கு துளி கூட கிடையாது.

ஆறுமுகசாமி விசாரணை கமிசனில் தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் அப்போதைய முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமிக்கு தெரிந்து தான் நடந்தது. அவர் தனக்கு தெரியவில்லை தொலைக்காட்சியை பார்த்து தான் தெரிந்து கொண்டேன் என்று கூறியது முழுவதும் பொய் என்று அறிக்கையில் இருக்கிறது. அதனால் துப்பாக்கி சூடு நடந்ததற்கு எடப்பாடி பழனிச்சாமி தான் காரணம் என்பது உண்மையாகி இருக்கிறது.

வேங்கை வயல் வழக்கில் எந்த அரசியல் அழுத்தமும் இல்லை. வேங்கைவயல் வழக்கில் இன்னும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கவில்லை. கூட்டணி கட்சிகள் அழுத்தம் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. இந்த சம்பவத்தில் யார் குற்ற வாளிகள் என்பது நாட்டிற்கு தெரிய வேண்டியது கடமை. இந்த சம்பவத்தில் எந்த கட்சிக்கும் குற்ற வாளிகளை காப்பாற்ற வேண்டிய அவசியம் கிடையாது.

நாங்கள் 200 இடங்கள் வெற்றி பெற்று தி.மு.க. ஆட்சி இந்தியா கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் ஆதரவோடு தனித்து திமுக ஆட்சி அமையும். ஐந்து முனைப்போட்டி எல்லாம் வராது கடைசியாக இருமுனை போட்டியாக தான் இருக்கும்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் முதலமைச்சரை சந்திக்க முடியவில்லை என்று கூறும் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது அவர் நினைத்தபோல முதலமைச்சரை சந்தித்துதான் வருகிறார். அவரை பொறுத்தவரை அவர் திமுக உறுப்பினர் திமுக உறுப்பினர்கள் அனைவருக்கும் தான் நேரம் கொடுக்க வேண்டும். மேலும் அவர் ஒரு கட்சியின் தலைவர் என்பதால் அவருக்கு அனைவருக்கும் போல் வாய்ப்பு அளிக்க தான் படுகிறது. துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறியது கிறிஸ்தவர்களோடு இருக்கும் போது நான் கிறிஸ்தவன், இஸ்லாமிய நண்பர்களோடு இருக்கும் போது இஸ்லாமியன் , இந்துக்களோடு இருக்கும்போது இந்து அப்படி அனைவருக்கும் நான் பொதுவானவன் என்றுதான் அவர் கூறி யுள்ளார். அவர் பேசிய முதல் கருத்தை மட்டும் பார்க்காமல் முழுமையாக அவர் பேசியது கேட்டு பாருங்கள் என்று தெரிவித்தார்.



சட்டமேதை அம்பேத்கரை இழிவுபடுத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் பாப்பிரெட்டிப்பட்டியில் உள்ள அம்பேத்கார் திருஉருவச் சிலைக்கு கருப்பு பேட்ச் அணிந்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இதே போல் காரிமங்கலத்தில் மத்திய ஒன்றிய செயலாளர் இல.கிருஷ்ணன் தலைமையிலும், அரூரில் மேற்கு ஒன்றிய செயலாளர் சௌந்திரராசு தலைமையிலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சி.கிருஷ்ணகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.சித்தார்த்தன், பி.சி.ஆர்.மனோகரன் பேரூர் கழக செயலாளர் வி.கே.சீனிவாசன்,இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஆர்.சிவகுரு உள்ளிட்ட மாநில,மாவட்ட ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.



புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்களை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து, கரூர் தலைமை தபால் நிலையம் அருகில், கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டக் கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி நடைபெற்றது. மாவட்ட கழக அவை தலைவர் டி.ராஜேந்திரன் தலைமை வகித்தார். எம்எல்ஏக்கள் இரா. மாணிக்கம், ஆர். இளங்கோ, க. சிவகாமசுந்தரி, மாநில நெசவாளர் அணித்துணைத் தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், மாநில சிறுபான்மை பிரிவு இணைச்செயலாளர் முனவர் ஜான், மாநில கொள்கை விளக்க துணைச்செயலாளர் கரூர் முரளி, மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். பகுதி கழக பொறுப்பாளர் விஜிஎஸ்.குமார் நன்றியுரை கூறினார்.